செ.வெ.எண்: 455/2016 நாள்: 16.07.2016


# மாவட்ட காசநோய் மையம்

கன்னியாகுமரி மாவட்ட மருத்துவக்கல்லூரி வளாகம்
ஆசாரிபள்ளம், கன்னியாகுமரி மாவட்டம். தொலைபேசி: 04652-269043


தேதி : 13.07.2016

## மருத்துவ மாணவர்கள் காசநோய் ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும்

**துணை இயக்குநர் மருத்துவர் வி.பி.துரை வேண்டுகோள்**

கன்னியாகுமரி மாவட்ட மருத்துவக்கல்லூரியில் உள்ள பயிற்சி மருத்துவர்களுக்கு காசநோய் பயிற்சி மாவட்ட காசநோய் மையத்தில் இன்று (13.07.2016) தொடங்கியது. இந்த பயிற்சி மூன்று நாட்கள் நடைபெறும். பயிற்சி முகாமை துவக்கி வைத்த கன்னியாகுமரி மாவட்ட காசநோய் தடுப்புத் திட்டத் துணை இயக்குனர் மருத்துவர் வி.பி.துரை அவர்கள் உரையாற்றும்போது,

இந்தியாவில் காசநோயால் ஆண்டிற்கு 20 லட்சம் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். உரிய சிகிட்சை எடுத்துக் கொள்ளாமல் 3 லட்சம் பேர் வரை மரணம் அடைகிறார்கள். இவ்வளவு மருத்துவ வசதிகள் பெருகிய காலகட்டத்தில் இவ்வளவு பேர் மரணம் அடைவது வேதனைக்குரிய வி'யம். தற்பொழுது 6 முதல் 8 மாதங்கள் சிகிட்சை அளிக்கப்படுகிறது. இந்த சிகிட்சையின் காலஅளவை குறைக்க புதிய மருத்துகள் கண்டறியப்பட வேண்டும். எனவே மருத்துவ மாணவர்கள் காசநோய் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும்.

மேலும் பன்முகத்தன்மை (MDR TB) காசநோயின் தாக்கம் தற்போது அதிகரித்துவருகிறது. இதன் சிகிட்சை காலம் இரண்டு ஆண்டுகள். இது மருத்துவத்துறைக்கு ஒரு பெரும் சவாலாகவே இருப்பதோடு நோயாளிக்கு பெரும் துன்பத்தையும் துயரத்தையும் ஏற்படுத்துகிறது. நோயாளிகளின் துன்பத்தை துடைப்பது மருத்துவர்களின் கடமை. வரலாறு பல மருத்துவ மாணவர்களின் ஆராய்ச்சி சாதனைகளை பதிவு செய்துள்ளது. அதில் குறிப்பிடத்தகுந்தவை ஜேமாக்லீன் (JayMclean) என்ற மருத்துவ மாணவர் இரத்தம் உறையாமல் இருக்க பயன்படுத்தப்படும் மருந்து ஹெப்பாரினை (Heparin) கண்டுபிடித்தார். அதே போல் இன்று சர்க்கரை நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் இன்சுலின் மருந்தை சார்லஸ் பெஸ்ட் என்ற மருத்துவ மாணவரால் கண்டுபிடிக்கப்பட்டது என்று கூறினார்.

இந்த பயிற்சியில் கன்னியாகுமரி மாவட்ட காசநோய் தடுப்பு சிறப்பு மருத்துவ அலுவலர் டி.முத்துகுமார் கலந்து கொண்டார்.

துணை இயக்குனர் (காசநோய்)
கன்னியாகுமரி மாவட்டம்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கன்னியாகுமரி மாவட்டம்.**